வேதியல் மாவட்டம்

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

14 x 1 = 14

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

பலவுள் தெரிக.

1. மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ் - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை

இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| அ) உரிமைத்தாகம் | - | 1. | பாரசீகக் கவிஞர் 3 |
| ஆ) அஞ்ஞாடி | - | 2. | பூமணி 1 |
| இ) ஜலாலுதீன் ரூமி | - | 3. | பக்தவச்சல பாரதி 4 |
| ஈ) தமிழர் குடும்ப முறை | - | 4. | சாகித்திய அகாதமி 2 |

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

4. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்

அ) நா.வானமாமலை ஆ) பரலி.சு.நெல்லையப்பர் இ) தி.சு.நடராசன் ஈ) பாரதியார்

5. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற கருணை மனம் உடையவர்

அ) திருமூலர் ஆ) வள்ளலார் இ) திருநாவுக்கரசர் ஈ) பட்டினத்தார்

6. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

7. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

8. சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்

அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமம்

9. Arrival - என்பதன் தமிழ்ச்சொல்

அ) வருகை ஆ) புறப்பாடு இ) வானூர்தி ஈ) நவீனத் தொடர்வண்டி

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10. சாபவிமோசனம், அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

11. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு நதி கடக்கச் சொல்வது

அ) கடந்தகால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இடிந்த நிலத்தை ஈ) இவை அனைத்தையும்

12. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

13. மோட்டார் வாகனச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 2016 ஆ) 2018 இ) 2017 ஈ) 2019

14. உரிமைத்தாகம் கதையின் ஆசிரியர்

அ) உத்தமசோழன் ஆ) பூமணி இ) தோப்பில் முகமது மீரான் ஈ) சாந்தாதத்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

17. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

18. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.

20. அக்காலத்து கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

21. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூல் பற்றிக் குறிப்பு வரைக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. *கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றனுக்கு கொடுக்கப்பட்டுள்ள நான்கு சொற்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்கவும்.*

அ) குதிரை, வேகம், ஓடு, தாவு ஆ) திரை, காண், கைதட்டல், மக்கள்

23. *தொகைச் சொற்களை விரித்து எழுதுக :*

முத்தமிழ் *(அல்லது)* இருதிணை

24. *கீழ்க்காணும் சொல்லுருபுகளை பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.*

தானே <

25. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. *(விடைக்கேற்ற வினா அமைக்க)*

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :

அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சுக்கோ.

ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?

27. கலைச்சொல் தருக :

அ) VISA ஆ) PASSPORT

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக :

அ) அமர்ந்தான் ஆ) கலங்கி

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக :

அ) ஒருமையுடன் ஆ) உரனுடை

30. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

31. சூதும் கள்ளும் கேடு தரும். - திருக்குறள் வழி விவரிக்க.

32. தன்னேர் இலாத தமிழ் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

34. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 x 4 = 8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். விளக்குக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. இந்தோ -சாரசனிக் கட்டடக்கலை பற்றி எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. அ) சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. கீழ்க்காணும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

அ) தன்கையே தனக்கு உதவி

ஆ) சிறுதுளி பெருவெள்ளம்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. பா நயம் பாராட்டுக. (மையக் கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

- கவிமணி தேசிய விநாயகம்

42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

43. வெண்பாவிற்குரிய பொது இலக்கணம் யாது?

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 x 6 = 18**

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) நிர்வாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன எவை?

(அல்லது)

ஆ) தலைக்குளம் சிறுகதையின் மூலம் நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4 + 2 = 6**

47. அ) குகனோடும் ....... எனத் தொடங்கும் கம்ப இராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "அறிவு" என முடியும் குறள்.

******

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com